**தீபகற்ப மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்களிடமிருந்து மேய்ப்புப்பணி கடிதம் மார்ச் 2020 தேதியிட்டது**

## Covid-19 தொற்றுநோய் காரணமாக திருப்பலிகள் மற்றும் நம்பிக்கையாளர்களின் அனைத்து பொது ஒன்றுகூடல் நிகழ்வுகள் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

அன்புள்ள சகோதர திருப்பணியாளர்களே, துறவறத்தாரே, மற்றும் பொதுநிலையினரே,

கடந்த சில வாரங்களாக நம் அனைவருக்கும் தேசிய அரசியல் நெருக்கடி, கொரோனா வைரஸ் ( கோவிட் -19) மற்றும் வழக்கத்திலிருந்த நமது கத்தோலிக்கப் பழக்க வழக்கங்கள் சிலவற்றில் பொது சுகாதார பாதுகாப்பை முன்னிட்டுச் செய்யப்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை மும்முனை சவால்களாக நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக கடந்த சில வாரங்கள் நம் அனைவருக்கும் ஒரு கடினமான காலமாக அமைந்தது. உங்கள் ஆயர்களாக, உங்களில் பலர் அனுபவிக்கும் வலி, குழப்பம் மற்றும் பதட்டம் ஆகியவற்றை நாங்கள் முழுமையாக அறிவோம்.

ஒவ்வொரு பங்கிலும் ஆயர்களின் பரிந்துரைகளை மற்றும் பொதுப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த எங்களுக்கு உதவிய உங்கள் ஒத்துழைப்புக்கும், உங்களது இறைவேண்டல்களுக்கும், கடவுளின் விடுதலையை மற்றும் அவரது அருளையும் நம்புவதில் நீங்கள் தொடர்ந்து மீண்டுவருவதற்கும் நன்றி கூறுகின்றோம். நிலைமை மேம்படும் என்ற எங்கள் எதிர்பார்ப்பு எங்களுக்கு இருந்தபோதிலும், உண்மையில் கடந்த வாரங்களில் நிலைமை மோசமடைந்துள்ளது. உலகெங்கிலும் நிலைமையை மேம்படுத்துவதைக் கண்காணித்து வரும் உலக சுகாதார அமைப்பு (WHO), கோவிட் –19 ஒரு தொற்றுநோய் என்று அறிவித்துள்ளது.

இதன் பொருள், "ஒரு புதிய நோயின் உலகளாவிய பரவல்" என்பதாகும். உலக சுகாதார அமைப்பின் (WHO) பொது இயக்குனர், "சீனாவுக்கு வெளியே கோவிட் –19 பாதிப்புகளின் எண்ணிக்கை 13 மடங்கு அதிகரித்துள்ளது என்றும் பாதிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது" என்றும் தெளிவான விவரங்களை எங்களுக்கு வழங்கியுள்ளார். நேற்றைய கணக்கின்படி, மலேசியாவில் 149 உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இது இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலத்திற்குள் 126 பாதிப்புகள் அதிகரிப்பு ஆகும். மலேசிய சுகாதார அமைச்சகம் கூடுதல் மருத்துவ ஆலோசனைகளை வெளியிட்டுள்ளது, இதில் அனைத்து "பொதுமக்கள் ஒன்றுகூடல்களும் ரத்து செய்யப்பட வேண்டும் என்பதும் அடங்கும்.

கடந்த வாரங்களில், தீபகற்ப மலேசியாவில் உள்ள மறைமாவட்டங்களின் மூன்று, பேராயர் / ஆயர்களாகிய நாங்கள், இந்நோய் பரவலை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சியில் பாதுகாப்பு நடவடிக்கைகளாக பலதரப்பட்டப் பரிந்துரைகள், ஆலோசனைகள் மற்றும் ஆயர் அலுவலக அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம்.

இந்த நடவடிக்கைகள் இத்தொற்றுநோய் பரப்புவதற்கான அபாயத்தைத் தணிக்க உதவும் என்று நாங்கள் நம்பினோம், ஆனால் அதை ஒரு குறிப்பிட்ட வளாகத்தில் பெரும் கூட்டம் கூடும் போது முறியடிக்க முடியாது என்பதை, இப்போது உணர்கிறோம்.

நம் நாட்டில் பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், பிற நாடுகளில் சிவில் மற்றும் சமய அதிகாரிகள் இத்தொற்று நோயின் அச்சுறுத்தலுக்கு உடனடி நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதமாக இருந்ததினாலும் கட்டுப்படுத்த இயலாத பரவுதலை நாம் காணும்போது, இப்போது நாம் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

இது ஓர் தீவிரமான நடவடிக்கையாகத் தோன்றக்கூடும். ஆனால் அவ்வாறு செய்யத் தவறினால் இதன் அசுர வேகப் பரவுதலின் விளைவாக மோசமான விளைவுகளை இது ஏற்படுத்தக்கூடும் என்பதையும், நம் சமூகங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை ஆபத்தில் ஆழ்த்துவதையும், பெரிதும் சிரமப்பட்ட நமது சுகாதார சேவைகளுக்கு மேலும் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் உணர்கிறோம்.

ஆகவே, இப்போது அதிக இறைவேண்டல்களுக்குப் பின்னரும், இத்துறையில் உள்ள மருத்துவ நிபுணர்களின் குழுவைக் கலந்தாலோசித்த பிறகும், மேலும் இந்த வைரஸ் தொற்று நோய் பரவுவதைத் தடுக்கத் தேவையான பின்வரும் கூடுதல் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை ஆழ்ந்த கனத்த இதயத்தோடு அமுலாக்கம் செய்ய விரும்புகிறோம்:

1. அனைத்து வார இறுதி மற்றும் வார நாள் பொதுமக்கள் திருப்பலிகள் **மார்ச் 14 முதல் (அல்லது மார்ச் 13, மாநிலத்தின் வார இறுதி வெள்ளிக்கிழமை தொடங்கினால்) 2020 மார்ச் 29 வரை** இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. இது பொது பள்ளி விடுமுறைகளுடன் ஒத்துப்போகிறது. எனவே இந்த காலகட்டத்தில் அனைத்து கத்தோலிக்கர்களும் திருப்பலிக்கு உதவிவிட / மற்றும் கலந்துகொள்வதற்கான அவர்களின் ஞாயிற்றுக்கிழமை கடமையை நிறைவேற்றுவதில் இருந்து விலக்கு அளிக்கிறோம். இந்த விலக்கு தற்போதைய நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரு தற்காலிக நடவடிக்கையாகும். மேற்கண்ட இடைநீக்க காலத்தை 2020 மார்ச் 29 ஆம் தேதிக்கு அப்பால் நீட்டிக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான நிலைமையை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து மறு ஆய்வு செய்வோம். கோலாலம்பூர் பேராயரின், பேராயர் சமூக தொடர்பு பணியகம் பொதுமக்களுக்கான வார இறுதி நாட்களில் பல்வேறு முக்கிய மொழிகளில், வார நாள்களில் ஆங்கிலத்தில் திருப்பலியை ஒளிபரப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது என்பதை நினைவில் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

2. திருஅவையின் ஆன்மீக நன்மைக்காகவும், நம்பிக்கையாளர்களின் நோக்கங்களுக்காகவும், தற்போதைய நெருக்கடியைத் தணிப்பதற்காகவும் திருப்பணியாளர்கள் தனியாக திருப்பலி கொண்டாடக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

3. அனைத்து மறைக்கல்வி வகுப்புகளும் மூடப்பட வேண்டும் மற்றும் அதே காலகட்டத்தில் மறைக்கல்வி திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் யாவும் ரத்து செய்யப்பட வேண்டும்.

4. பங்கில் அல்லது அ.தி.ச.வில் நிகழவுள்ள அனைத்து கூட்டங்களும், ஒன்றுகூடல்களும், ஆர்.சி.ஐ.ஏ (முதியோர் புகுமுக அருட்சாதன வகுப்புகள்) அமர்வுகள், மற்றும் இதர நிகழ்வுகள் யாவும் இந்த காலகட்டத்தில் ரத்து செய்யப்பட்டு அடுத்த அறிவிப்பு வரை நிறுத்தப்பட வேண்டும்.

5. திருமணங்கள் அல்லது இறப்பு திருப்பலிகள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு உங்கள் பங்குத் திருப் பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

6. ஒப்பரவு சடங்குகளுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நோயிற்பூசுதல் மற்றும் வீட்டில் நோயுற்றிருப்போருக்கு நற்கருணை வழங்க தயவுசெய்து உங்கள் பங்குத் திருப்பணியா ளரைச் சந்திக்கப் பங்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். தூயப் பணியை நிறைவேற்றும் போது தேவையான சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் திருப்பணியாளர்கள் எடுக்க வேண்டும்.

7. தேவாலயங்கள், சிற்றாலயங்கள் அல்லது செப அறைகள் (பொருந்தக்கூடிய இடங்களில்), அந்தந்த பங்கில் திட்டமிடப்பட்ட நேரங்களின்படி தனியார் மற்றும் தனிப்பட்ட இறைவேண்டல் மற்றும் நற்கருணை ஆராதனைக்காக திறந்திருக்கும். விவரங்களுக்கு உங்கள் பங்கு அலுவலகம் மற்றும் பங்கு வலைத்தளத்துடன் தொடர்பு கொள்ளவும்.

*2020* மார்ச் *19*, புனித கன்னி மரியின் கணவரும், திருஅவையின் பாதுகாவலருமான புனித யோசேப்பின் பெருவிழா அன்று, புனித யோசேப்பின் பரிந்துரைக்கும், இந்த நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான கடவுளின் தலையீட்டுக்கும் நோன்பு நாளாக நியமிக்கப் படுள்ளதை நாங்கள் அறிவிக்கிறோம்.

இருப்பினும், ஒளிபரப்பப்படும் திருப்பலிகள், ஞாயிற்றுக்கிழமை மற்றும் புனித நாட்களின் திருப்பலிக்கு உதவ / கலந்துகொள்ள வேண்டிய கடமைக்கு மாற்று நடவடிக்கையாகக் கருதப்படக் கூடாது. ஞாயிறு மற்றும் வார நாட்களில் திருப்பலியைத் தொலைக்காட்சி வழி பார்ப்பது ஆன்மீக "பக்தியின்" ஒரு வடிவமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட ஆன்மீக பக்தி வழிகாட்டிகளில், இறை வார்த்தையை வாசித்தல், குறிப்பாக அன்றைய திருப்பலிக்கான வாசகங்களை வாசித்தல், தூய செபமாலையைச் செபித்தல், ஆன்மீக நற்கருணை வேண்டல் செய்தல், நோன்பு இருத்தல், பிற பக்தி முயற்சிகளில் குறிப்பாக சிலுவைப்பாதை, இரக்கத்தின் ஆண்டவர் மன்றாட்டு போன்றவற்றில் ஈடுபடுதல் வரவேற்கப்படுகிறது..

இந்த முடிவால் நம்பிக்கையாளர்களில் பலர் மிகுந்த வேதனையடைவார்கள் என்பதை நாங்கள் உணர்கிறோம். மேலும் தூய நற்கருணையின் தவிர்க்கமுடியாத ஆன்மீக மதிப்புக்கு சமமான மாற்று எதுவும் இல்லை என்பதையும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால் தற்போதைய நெருக்கடி இரண்டு தேர்வுகளை மட்டுமே விட்டுச்செல்கிறது. ஒன்று நம்முடைய தற்போதைய தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்வது, அல்லது இந்த வைரஸ் மேலும் பரவுவதைத் தடுக்க தனிநபர்களின் அனைத்து ஒன்றுகூடல் கூட்டங்களை (திருப்பலி உட்பட) முடக்குவதாகும்.

முதல் விருப்பம் மட்டும் போதும் என்பதற்கு இப்போது பெரும் அளவில் பரவுதலை எதிர்கொள்ளும் நாடுகளில் இருந்து எந்த ஆதாரமும் இல்லை. மறுபுறம், பிற நாடுகளின் அனுபவங்கள் வாயிலாக சமூக ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பதனால் அதிக அளவில் இந்நோய் பரவுதலைத் தவிர்க்க முடியும் என்பதை நாம் அறிகிறோம்.

*2020* மார்ச் *11* ஆம் தேதி வெளியிடப்பட்ட சுகாதார அமைச்சின் பரிந்துரையின் படி அனைத்து பொது மக்கள் ஒன்றுகூடல்களை ஒத்திவைக்க வேண்டியுள்ளது.

எல்லாம் வல்ல கடவுள்மீது நமது நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் தொடர்ந்து வைக்கிறோம். இந்த நெருக்கடியை அவர் விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவார் என்று இறைவேண்டல் செய்வோம்.

எல்லாம் வல்ல கடவுள் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் நல்ல உடல்நலத்தையும் அமைதி மற்றும் நிறைவான அருளாசியும் அளிப்பாராக.

கிறிஸ்துவில் உங்கள் ஆயர்கள்,

Rt. Rev. Sebastian Francis, D.D
Bishop of Penang

Most Rev. Julian Leow, D.D.
Archbishop of Kuala Lumpur

Rt. Rev. Bernard Paul, D.D.
Bishop of Malacca-Johore